DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No. 114/2024
Deposition of Witness for : PW 2

| | |
|---|---|
| Name. | **திரு. ராஜ்குமார்** |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 04.08.2025

**எதிரிகள் ஆஜர்.**

## முதல் விசாரணை

1) நான் முதலியார் குப்பம் கிராம உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். 4.6.2023 அன்று மதியம் 2 மணி அளவில் நான் அலுவலகத்தில் இருந்தபொழுது செய்யூர் காவல் நிலையத்தில் இருந்து காவலர் ஒருவர் வந்து ஓதியூர் கிராமம், கங்கையம்மன் கோயில் தெருவில் ஒரு வீட்டின் பின்புறம் சாராயம் வைத்திருப்பதாகவும், அந்த சாராயத்தை பவானி என்பவர் வைத்திருப்பதாகவும், அவர் போலிசாரைச் கண்டவுடன் ஓடிவிட்டார் என்றாலும், அதற்காக சாட்சியாக இருக்குமாறு என்னையும், கிராம நிர்வாக அலுவலரையும் அழைத்தார். நானும், கிராம நிர்வாக அலுவலரும் அங்கு சென்று பார்த்தபொழுது அங்கு 3 வெள்ளை நிற கேன்களில் சாராயம் இருந்தது. அதனை போலிசார் பறிமுதல் செய்து காவல் நிலையம் எடுத்துச் சென்றனர். நாங்களும் சென்றுவிட்டோம். மறுநாள் மதியம் காவல் நிலையத்தில் இருந்து எங்களை அறிக்கை சமரப்பிப்பதற்காக அழைத்தார்கள். நானும், கிராம நிர்வாக அலுவல ரும் சென்றோம். காவல் நிலையத்தில் பவானி இருந்தார். காவல் ஆய்வாளரிடம் பவானியின் அடையாளத்தைக் கூறினோம். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பங்கள் என்னுடையதுதான். மேற்கண்ட கையொப்பங்களை சாராயம் பிடித்த மறுநாள் காவல் நலையத்தில்

வைத்து போட்டுக் கொடுத்தோம். **அந்த கையொப்பங்கள் அ.த.சா.ஆ. 4 முதல் 6**. கையொப்பங்களை சாட்சிக்காகத்தான் போட்டோம். போலிசார் இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

2) 4.6.2023 அன்று எங்கள் அலுவலகத்திற்கு வந்த போலிசாரின் பதவி நிலை தெரியாது. வந்த காவலர் எழுத்து மூலமாக கடிதம் ஏதும் கொடுக்கவில்லை. அன்றைய தினம் சம்பவ இடத்தில் மொத்தம் 20 காவல் துறை அதிகாரிகள் இருந்தார்கள் ஒருவர் மட்டும் எங்கள் அலுவலகத்திற்கு வந்து அழைத்துச் சென்றார். சம்பவ இடத்தில் கேன்கள் மேலே தெரிந்தவாறு இருந்தது. அதற்காகத்தான் போலிசார் எங்களை அழைத்துச் சென்றார்கள். போலிசார் கேன்களை வழக்கிற்காக தயார் செய்து கொண்டார்கள் என்றாலும், சாட்சிக்காக மட்டும் எங்களை அழைத்துச் சென்றார்கள் என்றாலும் சரியல்ல. உண்மையான புகாராக இருந்திருந்தால் சம்பவ இடத்திற்கு செல்லும் பொழுதே போலிசார் எங்களை அழைத்துச் சென்றிருப்பார்கள் என்றால் சரியல்ல. மறுநாள் 5.6.2023 அன்று மாலை சுமார் 4 அல்லது 5 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். நாங்கள் செல்வதற்கு முன்பே ஆவணங்களை தயார் செய்து வைத்திருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை அளித்த பின்பு தான் தயார் செய்தார்கள். கிராம நிர்வாக அலுவலர் நடந்த சம்பவத்தை அறிக்கையாக எழுதிக் கொடுத்தார். நாங்கள் அறிக்கை ஏதும அளிக்கவில்லை என்றாலும், போலிசார் தயார் செய்த ஆவணங்களில் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன தேதியில் ஆவணங்கள் ஏதும் தயார் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பின்னிட்டு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.